என்எல்சி இந்தியா லிமிடெட்

மின் இதழ்

ஜூன்-2018

CREATING WEALTH FOR WELLBEING

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள, 100 மெ.வா. திறன் கொண்ட, 3 சூரியசக்தி மின் நிலையங்களை, நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா, நிதித்துறை இயக்குனர், திரு ராகேஷ்குமார்ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு மத்திய ரயில்வே, நிலக்கரி, நிதி & பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர், திரு பியூஷ் கோயல் அவர்கள் நெய்வேலியில், 14.06.2018 அன்று, நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

வடிவமைப்பு&வெளியிடுவோர்
என்.எல்.சி. இந்தியா லிமிடெட்
மக்கள் தொடர்புத் துறை

நாட்டிற்கு சூரிய ஒளிமின்திட்டங்களை அர்ப்பணித்த மாண்புமிகு மத்திய அமைச்சர்

நெய்வேலிக்கு வருகை தந்த மாண்புமிகு மத்திய ரயில்வே, நிலக்கரி, நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர், திரு பியுஷ் கோயல் அவர்கள், தமிழகத்தில், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், நமது நிறுவனம் அமைத்துள்ள 300 மெகவாட் சூரிய ஒளி மின் நிலையத்தை, நெய்வேலியிலிருந்து காணொளிக்காட்சி மூலம், 14.06.2018 அன்று, நாட்டிற்கு அர்ப்பணித்து உரையாற்றுகையில், நமது நிர்வாகம் ஆற்றிவரும் இடையறாப் பணிகளை வெகுவாகப் பாராட்டிய அவர், நிறுவன வளர்ச்சிக்கு ஊழியர்கள் ஆற்றிவரும் பணியினை புகழ்ந்துரைத்தார். மேலும், எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்கும் வகையில், புதிய இந்தியா உருவாக அனைவரும் பாடுபடவேண்டும், என்றுக் கேட்டுக்கொண்டார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புகோட்டை அருகில் தொப்பளாக்கரை மற்றும் சேதுபுரம் என்ற பகுதிகளில் தலா 100 மெகாவாட் திறன் கொண்ட சூரியமின் திட்டங்கள், திருநெல்வேலி மாவட்டம் செல்லையா செழியநல்லூர் பகுதியில் 100 மெகாவாட் சூரிய மின் திட்டம், ஆகியன, 15 ஆண்டு காலம், இயங்குதல் மற்றும் பராமரிப்புத் தொகையினைச் சேர்த்து தலா ரூ.434 கோடி மதிப்பில், மொத்தம் ரூ.1302 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் மின்சக்தி யூனிட் 1க்கு, 4 ரூபாய் 41 காசுகள் என்ற விலையில் தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கப்பட உள்ளது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னிலையில், நடைபெற்ற மற்றொரு நிகழ்வில், நமது நிறுவன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை, அண்ணா பல்கலையின் ஆற்றல் ஆய்வுத்துறையுடன் இணைந்து மேற்கொள்ளவிருக்கும் ஆராய்ச்சிப் பணிக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர், டாக்டர் எஸ். கணேசன் மற்றும் நமது நிறுவன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை பொது மேலாளர், டாக்டர் வி. மனோகரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஆராய்ச்சியின்படி, நெய்வேலி பழுப்புநிலக்கரியில் 55% ஈரப்பதத்தினை சூரியனின் வெப்ப ஆற்றலைப் பயன்படுத்தி 12 சதவிகிதமாக குறைத்து அதன் எரிதிறனை, ஒரு கிலோகிராமிற்கு 2700 கிலோ கலோரி என்பதை 4350 கிலோ கலோரியாக அதிகரிக்க ரூ.269 லட்சம் செலவில் ஒரு மாதிரி ஆலை அமைக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சிகளை நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா, இயக்குனர்கள் திரு ராகேஷ் குமார், திரு சுபீர்தாஸ், திரு வி. தங்கபாண்டியன், திரு ஆர். விக்ரமன், சிறப்புத் திட்ட அதிகாரி திரு நாதெள்ள நாக மகேஸ்வர் ராவ், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர், டாக்டர் சூரப்பா, நமது நிறுவன உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பங்கேற்றனர்.

உலக சுற்றுச்சூழல் தினம்-2018-னை முன்னிட்டு, நமது நிறுவனம், இவ்வாண்டு, நெகிழி உபயோகத்தைக் குறைக்க, இளைஞர்களை ஊக்குவிக்கும் நூதன முறையைக் கையாண்டது. நமது நிறுவனத்தின் சார்பில், இவ்வாண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு, 05.06.2018 அன்று நெய்வேலி, ஜம்புலிங்க முதலியார் சிலையிலிருந்து, பிரதான அங்காடி காந்தி சிலை வரை, ஒரு சிறு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது. மிகவும் வித்தியாசமான முறையில் நடத்தப்பட்ட இந்த ஓட்டப்போட்டியில், பங்கேற்ற பள்ளி மாணவமணிகள், சாலையில், தாங்கள் கடந்து சென்ற சுமார் 2 கிலோமீட்டர் தூரத்தில், இருபக்கமும் இருந்த நெகிழி பொருட்களை சேகரித்து அப்புறப்படுத்தினர். நமது மின்துறை இயக்குநர் - திரு. வி. தங்கபாண்டியன், மனிதவளத்துறை இயக்குநர் - திரு. ஆர். விக்ரமன் ஆகியோர் மாணவமணிகளிடையே நெகிழி பொருட்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் இந்த ஓட்டத்தை கொடியசைத்து துவக்கி வைத்தனர். உலக சுற்றுச்சூழல் தினத்தின் ஒரு பகுதியாக, சுரங்கப்பகுதிகள், அனல்மின் நிலையங்கள், அலுவலகங்கள், நகரியத்தின் முக்கியப் பகுதிகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாந்தி நிலையம் என்ற நவீன மயான வளாகத்திலும், நமது உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகள் நட்டனர். இதனைத்தொடர்ந்து அன்று மாலை நெய்வேலி கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நமது இயக்குநர்கள் பங்கேற்று உரையாற்றினர். முடிவில், நமது நிறுவன சிறப்புப் பணிகளுக்கான அலுவலர் திரு. என்.எம். ராவ் அனைவரையும் வரவேற்று உரையாற்றுகையில், நமது எதிர்கால சமுதாயத்தின் நலம் கருதி, நெகிழியை முற்றிலுமாக நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போது, நெகிழி அற்ற தூய்மையான சுற்றுச்சூழலைப் பராமரிப்பது குறித்து அனைவராலும் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்விழாவிற்கு தலைமையேற்ற நமது நிதித்துறை இயக்குநர் திரு. ராகேஷ் குமார் அவர்கள், நெகிழி பொருட்களை ஒழிக்கும் வகையில் நிறுவனம் மேற்கொண்டுவரும் நவீன நடவடிக்கைகளைப் பாராட்டினார். தமிழக மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் கடலூர் மண்டல துணை இயக்குநர், திரு. ஆர். தனசேகரன் இவ்விழாவில் பங்கேற்று நெகிழி பொருட்களால் உண்டாகும் மாசினைக் கட்டுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்.

நிகழ்ச்சியில், நமது மின்துறை இயக்குநர் திரு. வி. தங்கபாண்டியன், ஒரு முறை மட்டுமே பயன்படுத்திய பின்னர் தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களை முற்றிலும் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். மனிதவளத்துறை இயக்குநர் திரு. ஆர். விக்ரமன் நெகிழி பொருட்களை, குறிப்பாக, ஒரு முறை உபயோகித்து தூக்கி எறியப்படும் நெகிழிக்கு அடுத்த ஆண்டிலிருந்து தடை விதிக்க தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கையினைப் பாராட்டிய அவர், அவ்வகை நெகிழி உபயோகத்தினை முழுவதுமாக, நெய்வேலியைச் சார்ந்தோர் விட்டுவிடவேண்டும் என்றுக் கேட்டுக்கொண்டார்.

நிறைவில், சுற்றுச்சூழல் துணை பொது மேலாளர், டாக்டர் எம். வேலன் அவர்களின், நன்றியுரையுடன், அன்றைய நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

சர்வதேச யோகா தினம்-2018

'சமாதானத்தைக் கொணரும் யோகா' என்ற மையக்கருத்தில் கொண்டாடப்பட்ட நான்காவது சர்வதேச யோகா தினத்தினை முன்னிட்டு, 21.06.2018 அன்று, பாரதி விளையாட்டரங்கில் நமது நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த யோகா நிகழ்ச்சிகளை, நிறுவனத் தலைவர் டாக்டர் சரத்குமார் ஆச்சார்யா அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் நெய்வேலியின் 14 பள்ளிகளைச் சேர்ந்த 1000 மாணவமணிகள் பங்கேற்று யோகா பயிற்சிகளை செய்து காட்டினர். இந்நிகழ்வில் பேசிய டாக்டர் ஆச்சார்யா, ஆரோக்கியமான உடலுடனும், மகிழ்ச்சியான மனதுடனும் வாழ, அனைவரும் யோகாசனங்களை கற்று, தொடர்ந்து பயிற்சி செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பாரதி விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த பிரம்மாண்டமான யோகசான பயிற்சி நிகழ்ச்சியை ஈஷா யோகா மையம், வேதாத்திரி மகரிஷியின் அறிவுத்திருக்கோயில், பிரம்ம குமாரிகள் ஆகிய அமைப்புகளின் தன்னார்வத் தொண்டர்கள் வழிநடத்தினர். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற யோகா பயிற்றுனர்களை டாக்டர் ஆச்சார்யா கௌரவித்தார். இந்நிகழ்வினைத் தொடர்ந்து, மாணவமாணவிகள் பங்கேற்ற, யோகா மற்றும் இரு வாரத் தூய்மைப் பணி விழிப்புணர்வுப் பேரணியை நிறுவனத் தலைவர் டாக்டர் ஆச்சார்யா அவர்கள் கொடியசைத்து வழியனுப்பினார். பாரதி விளையாட்டரங்கில் தொடங்கி, நகரின் முக்கிய பகுதிகளுக்குச் சென்று, பிரதான அங்காடி, மகாத்மா காந்தி சிலை அருகே நிறைவுபெற்ற இப்பேரணி தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் யோகாசனத்தின் தேவை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தியது.

ஜூன் 16 முதல் 30 வரை, 'தூய்மை இந்தியா இருவார விழா' நெய்வேலி மற்றும் அருகில் உள்ள கிராமங்களில், நமது நிறுவனத்தால் கொண்டாடப்பட்டுவருவதை முன்னிட்டு, நமது நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத்துறை, இருப்பு, மருங்கூர், வடலூர் மற்றும் எ.அகரம் ஆகிய 4 கிராமப் பள்ளிகளில், அவ்விழாவிடன் இணைந்து சர்வதேச யோகா தினத்தினையும் கொண்டாடியது. அதன் ஒரு பகுதியாக, இப்பள்ளியில் பயிலும் 1350 மாணவமணிகளுக்கும், நெய்வேலி மக்கள் சேவை இயக்கம், ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கம், நெய்வேலி இரத்ததானம் வழங்குவோர் சங்கம், நெய்வேலி தன்னார்வ இரத்த கொடையாளர் சங்கம் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் யோகா பயிற்சியை நிறுவனம் வழங்கியது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக, நமது நிறுவனம் நடத்திவரும் ஸ்நேகா வாய்ப்புப் பள்ளியில், நிறுவனத் தலைவர் மற்றும் இயக்குநர்கள் முன்னிலையில் அப்பள்ளி மாணவமணிகள் 80 பேர் யோகாசனப் பயிற்சிகளை செய்து காட்டினர். அதுபோன்று, இந்நிறுவனம் நடத்திவரும் 'ஆனந்தம் இல்லம்' என்ற முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் சுமார் 40 முதியோர்கள் யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சிகளில் என்எல்சி இந்தியா இயக்குநர்கள் திரு. ராக்கேஷ் குமார், திரு. வி. தங்கபாண்டியன், திரு. ஆர். விக்ரமன், உயர்அதிகாரிகள், ஊழியர்கள், ஆசிரிய பெருமக்கள் மாணவமணிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

நமது நிறுவனத்தால் நடத்தப்படும், 21வது நெய்வேலி புத்தகக் கண்காட்சி, 29.06.2018 அன்று, நெய்வேலி வட்டம்-11ல் அமைந்துள்ள பழுப்புநிலக்கரி அரங்குத் திடலில், தமிழ் மாநில மேதகு ஆளுனர், திரு பன்வாரிலால் புரோஹித் அவர்களால், தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும், இக்கண்காட்சியைச் துவக்கி வைத்து உரையாற்றிய, மேதகு அளுனர், “புத்தகக் கண்காட்சி என்பது, புத்தகங்களைக் கொண்டாடும் ஒரு நிகழ்வு; படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் ஓர் கொண்டாட்டம்; அறிவைப் போற்றும் ஓர் கொண்டாட்டம்” என்று கூறினார். அவ்வமயம், சென்னையைச் சார்ந்த, சிறந்த எழுத்தாளர், திரு சி. மோகன் அவர்களை ஆளுனர் அவர்கள் கௌரவித்தார்.

இக்கண்காட்சிக்கு, தலைமையேற்று உரையாற்றிய, நமது நிறுவனத் தலைவர், டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா, “புத்தகங்கள் நாகரிகங்களின் பிரதிநிதி மட்டுமல்லாமல், கலாச்சாரத்தை இணைக்கும் பாலமாகவும் விளங்குகிறது” என்றார். மேலும் கூறுகையில், வாசகர்களின் அறிவைப் பெருக்குவதுடன், புத்தகங்கள் உலகச் சிந்தனையை வளர்க்கவும் உதவுகிறது என்றார்.

நமது நிறுவனம், முதலாவது புத்தகக் கண்காட்சியை, 1998-ம் வருடம் தொடங்கியது. அதுமுதற்கொண்டு, வருடாவருடம் தொடர்ந்து வெற்றியுடன் நடத்தப்பட்டுவரும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது. இக்கண்காட்சி நடைபெறும் 10 நாட்களில், ஒரே கூரையின் கீழ், 10 ஆயிரம் தலைப்புகளில், 150 பதிப்பகத்தார் கலந்துகொண்டு, காட்சிப்படுத்தும், ஓர் அறிவுக் களஞ்சியமாக இது திகழ்ந்து வருகிறது. இலக்கமுறை & காகித வடிவிலானப் புத்தகங்கள், வார/மாத இதழ்கள், பதிவு வட்ட தகடுகள் ஆகியன பள்ளி மாணாக்கர்கள் மற்றும் புத்தக ஆர்வலர்களைக் கருத்தில் கொண்டு, இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இக்கண்காட்சி நடைபெறும் நாட்களில், சிறந்த எழுத்தாளர்கள், பதிப்பகத்தார் கௌரவிக்கப்பட்டு, புதிய புத்தகங்கள் வெளியிடப்படும். சிறந்த கலைஞர்களைக் கொண்டு, கலைநிகழ்ச்சிகள் தினம் தோறும் நடத்தப்பட உள்ளன.

நமது நிறுவனத் தலைவர், டாக்டர் சரத் குமார் ஆச்சார்யா, இயக்குனர்கள், திரு ராகேஷ்குமார், திரு சுபீர்தாஸ், திரு வி. தங்கபாண்டியன், திரு ஆர். விக்ரமன், தலைமை கண்காணிப்பு அதிகாரி, திரு டி. வெங்கடசுப்பிரமணியன் மற்றும் உயர் அதிகாரிகள், இக்கண்காட்சியின் துவக்க தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியில், குறு வட்டத் தகடில் பதிவு செய்யப்பட்ட விழாமலரினை, கடலூர் மாவட்ட ஆட்சியர், திரு வி.பி. தண்டபாணி அவர்கள் வெளியிட, நமது நிறுவன நிதித்துறை இயக்குனர், திரு ராகேஷ் குமார் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். “திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு குறும்படம்” போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு, சான்றிதழும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

திட்டம் & செயலாக்கத் துறை
புதிய இயக்குனர் பதவியேற்பு

நமது நிறுவனத்தின், திட்டம் மற்றும் செயலாக்கத்துறை இயக்குனராக, திரு நாதெள்ள நாக மகேஸ்வர் ராவ், (57 வயது), 29.06.2018 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். மின் மற்றும் மின்னணுப் பிரிவில், பொறியியல் பட்டப்படிப்பு பெற்ற இவர், மின் உற்பத்தி தொழில்நுட்பத்தில், மேல்நிலைப் படிப்பினை, புதுடில்லி, இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் பயின்றுள்ளார். மேலும், வணிக நிர்வாகத்தில் மேல்நிலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

நமது நிறுவனத்தில், 2013-ம் ஆண்டு, பொது மேலாளராகப் பணியில் சேர்ந்த இவர், தேசிய அனல்மின் கழகத்தில், பல்வேறு பொறுப்புகளில், அனல்மின் நிலையத் திட்டம் மற்றும் செயலாக்கப் பிரிவில் பணிபுரிந்துள்ளார். அத்துடன், ரிலையன்ஸ் மின் நிறுவனத்தில், 4 வருட காலம், திட்ட செயலாக்கம் மற்றும் அனல்மின் நிலையத்தில், இயக்கம் & பராமரித்தல் பிரிவிலும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார். நெய்வேலியில் பணியில் சேர்ந்த பிறகு, நமது நிறுவனத்தின் ராஜஸ்தான் மாநில பர்சிங்சர் அனல்மின் திட்டப் பணிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இவர், தனது திறமையானப் பணியினால், பர்சிங்சர் சுரங்கம்-மற்றும்-அனல்மின் நிலையத் திட்ட இயக்குனராகவும், பித்நோக் அனல்மின் நிலையத்திட்டம் & பர்சிங்சர் அனல்மின் திட்ட விரிவாக்கத்தின், தலைமை திட்ட அதிகாரியாகவும் தனது பணியினை செவ்வனே செய்து, பர்சிங்சர் அனல்மின் நிலையத்தின் திறன் மதிப்பீட்டினை எட்டுவதற்கு, பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியவர் என்ற பெருமைக்குறியவர்.

சுரங்கம் மற்றும் அனல்மின் நிலையங்களில் அதிக அனுபவங்களை பெற்ற இயக்குனர் அவர்கள், நமது நிறுவனத்தின் திட்டம் மற்றும் செயலாக்கம் மேலும் சிறப்பான நிலையை எட்டும் என்பதில் ஐயமில்லை.

புதிய இயக்குனர் அவர்களுக்கு, மின் மலர் தனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது !

கோவை, ஈஷா யோக மையத்திற்கு, நவீன குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்

கோவை, ஈஷா யோக மையத்திற்கு வரும் பக்தர்கள் நலன் கருதி, நமது நிறுவனம், தனது சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின்கீழ் ரூ. 22 லட்சம் மதிப்பில் வழங்கியுள்ள நவீன குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தினை 12.06.2018 அன்று, நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத்குமார் ஆச்சார்யா அவர்கள் இயக்கிவைத்து, முறைப்படி ஈஷா யோக மையப் பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தார். இந்த நவீன குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், மணிக்கு 2 ஆயிரம் லிட்டர் குடிநீரை சுத்திகரிக்கும் திறன் கொண்டது.

நமது நிறுவனம், தனது சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும், சுகாதாரம், குடிநீர், கல்வி, விவசாயத்திற்கான நீர், அடிப்படை வசதிகள் என பலவகையான பணிகளை நெய்வேலிக்கு அருகில் உள்ள கிராமங்களுக்கு வழங்கி வரும் நிலையில், தற்போது, புகழ்மிக்க வரலாற்று சின்னங்கள் மற்றும் பழம்பெரும் கோவில்களிலும், சிறப்புப்பணிகளை மேற்கொண்டு வருகிறது.

ஈஷா அறக்கட்டளையின் நிறுவனர் - சத்குரு ஜக்கி வாசுதேவ் மற்றும் நமது மனிதவளத்துறை இயக்குநர்-திரு. ஆர். விக்ரமன் ஆகியோர் முன்னிலையில் இந்த, வசதியை முறைப்படித் தொடங்கிவைத்துப் பேசிய நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத்குமார் ஆச்சார்யா, நமது நிறுவனம் மேற்கொண்டு வரும் சமூக மேம்பாட்டுப் பணிகளில், விவசாயத்திற்கும், குடிப்பதற்கும், நீர் வழங்க முக்கியத்துவம் அளித்து வருகிறது என்றார். நமது நிறுவனம், இதுபோன்ற வசதிகளை ஏற்கனவே நெய்வேலி, வில்லுடையான்பட்டு - அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், சிதம்பரம், - ஸ்ரீ நடராஜர் கோவில், திருப்பதி, திருமலை - ஸ்ரீ வேங்கடாசலபதி ஆலயம் மற்றும் பூரி - அருள்மிகு ஜெகநாதர் திருகோயில் ஆகிய திருத்தலங்களில் ஏற்படுத்தியுள்ளது.

நமது நிறுவன, சமூகப்பொறுப்புணர்வு, கல்வி மற்றும் விளையாட்டுத்துறைத் தலைமைப் பொது மேலாளர், திரு ஆர். மோகன், ஈஷா யோகா மையத்தின் பணியாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் பக்தர்கள் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில், ஈஷா மையத்தினைச் சார்ந்த பக்தர்கள், நமது நிறுவனம் சமூக மேம்பாட்டிற்காக ஆற்றிவரும் பணியினை வெகுவாகப் பாராட்டினர்.

சால்பட்டை பாதை மாற்றியமைப்பு

நமது நிறுவனம், தனது உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்காக, நெய்வேலி முதல் சுரங்கத்தின் பழுப்பு நிலக்கரி சால்பட்டை ஏற்கனவே சென்ற பாதையை மாற்றி, புதிய வழியில் அமைத்ததன் மூலம் ரூ. 17 கோடியே, 47 லட்சத்தை சேமித்துள்ளது. மாற்றியமைக்கப்பட்ட இந்த சால்பட்டை அமைப்பினை 08.06.2018 அன்று, நமது நிறுவனத் தலைவர் டாக்டர் சரத்குமார் ஆச்சார்யா அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், நிறுவன இயக்குநர்கள் திரு. ராகேஷ் குமார், திரு. சுபீர்தாஸ், திரு. வி. தங்கபாண்டியன், திரு. ஆர். விக்ரமன், சுரங்கத்துறை உயர் அதிகாரிகள், ஊழியர்கள் பங்கேற்றனர்.

நெய்வேலி முதல் சுரங்கத்தில், பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் பகுதியிலிருந்து, அதனை சேமித்துவைக்கும் கிடங்கு வரை, ஏற்கனவே இயங்கி வந்த 2000 மில்லிமீட்டர் அகலம் கொண்ட பழுப்பு நிலக்கரிக் சால்பட்டையின், குறிப்பிட்ட பகுதியில் அதன் பாதையை மாற்றியமைத்து, அதன் 2719 மீட்டர் நீளத்தினை, 839மீட்டர் நீளமாகக் குறைத்ததன் மூலம், சால்பட்டையினை இயக்கும் டிரைவ் ஹெட் என்ற இயந்திரங்கள் நான்கும் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள 630 கிலோவாட் திறன் கொண்ட உயர் அழுத்த மின் மோட்டார்கள் நான்கு, சால்பட்டை சட்டங்கள், உருளைகள், சுமார் 3300 மீட்டர் நீள சால்பட்டை, மோட்டாருக்கு மின்சக்தி வழங்கும் அதிக மின் அழுத்தம் கொண்ட கம்பிவடங்கள், என மொத்தத்தில் ரூ.12 கோடியே 79 லட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் மற்றும் இதரப் பொருட்கள் மிச்சப்படுத்தப்பட்டன. புதிய பொருட்கள் வாங்காது, இவையனைத்தையும் வேறு இடங்களில், சால்பட்டை வசதி அமைக்கப் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மாற்றியமைக்கப்பட்ட இப்புதிய பாதையில், 4 அதி உயர்திறன் கொண்ட மின் மோட்டார்களும், தேவைப்படாத காரணத்தால், ஆண்டிற்கு, சுமார் ஒரு கோடியே 26 லட்சம் யூனிட் மின்சக்தி இதன்மூலம் சேமிக்கப்படும். இதன் மதிப்பு மட்டும் ரூ. 468 லட்சம் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த தொகை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து சேமிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக்கப்பூர்வமான இப்பணியினை மேற்கொண்ட முதல் சுரங்க சால்பட்டை நிர்மாணிக்கும் பிரிவு பொறியாளர்களையும், ஊழியர்களையும் நிறுவனத் தலைவர் மற்றும் இயக்குனர்கள் வெகுவாகப் பாராட்டினர்.

65வது ஆட்சி மொழி அமலாக்கக் குழுக் கூட்டம்

65வது ஆட்சி மொழி அமலாக்கக் குழுக் கூட்டம், 22.06.2018 அன்று நெய்வேலி தலைமை அலுவலகத்தில் நிதித்துறை இயக்குனர் தலைமையில் நடைபெற்றது. நமது நிறுவனத்தில் ஆட்சிமொழி அமலாக்கத்தில் கண்டுள்ள வளர்ச்சி குறித்து, இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நிறுவனத்தின் ஹிந்தி பிரிவு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டிய, கூட்டத் தலைவர், நிறுவனத்தின் மற்றப் பிரிவுகளில் ஆய்வுக்கூட்டம் நடத்துவதற்கான ஆலோசனை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறு பெறப்பட்ட ஆலோசனையின்படி, ஒவ்வொரு மாதமும், கடைசி வெள்ளிக்கிழமை அன்று, ஆய்வுக்கூட்டம் நடத்தப்படும் என்ற அவர், அடுத்த மண்டலத்துடன் தொடர்பு கொள்ளும்போது, ஹிந்தி மொழியில் கடிதங்கள் எழுதுமாறு கேட்டுக்கொண்டார். மேலும், கோப்புகளில் குறிப்பு எழுதும்போது, ஹிந்தியில் எழுதுவதின் மூலம், மேலும் ஆட்சி அமலாக்கம் சிறப்பானதொரு நிலையை எட்டும் என்றார். அனைத்து அலுவலகப் பிரிவுகளிலும், அதிக எண்ணிக்கையிலான ஊழியர்களை தொலைதூரக் கல்வி மற்றும் நேரடி ஹிந்தி வகுப்புகளில் சேர பரிந்துரை செய்யுமாறுக் கேட்டுக்கொண்டார்.

இருவாரத் தூய்மைப் பணி

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, நமது நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவனங்களில், 2018, ஜூன்,16 முதல், ஜூன், 30-ம் தேதி வரை, 15 நாட்கள், இருவாரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இருவாரத் தூய்மைப் பணியின் துவக்கமாக, மாண்புமிகு, மத்திய ரயில்வே, நிலக்கரி மற்றும் நிதித்துறை அமைச்சர், திரு பியூஷ் கோயல், அவர்கள், 14.06.2018 அன்று, நெய்வேலியில் 500 பள்ளி மாணாக்கர்கள் பங்கேற்ற, “தூய்மை விழிப்புணர்வு பிரச்சார, சிறு மாரத்தான் போட்டியினைத்” தொடங்கி வைத்தார். இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடைபெற்ற மாரத்தான் ஓட்டத்தின்போது, மாணாக்கர்கள், பாதையின் இரு புரங்களிலும் இருந்த, நெகிழி மற்றும் குப்பையினை அகற்றிக் கொண்டு இலக்கை அடைந்தனர்.

இந்த இருவார தூய்மைப் பணியின்போது, நமது நிறுவனம், தூய்மை விழிப்புணர்வு பிரச்சாரம், பெண்களுக்கான சுகாதாரம், திறந்த கழிப்பிடங்கள் அற்ற நிலையின் பயன்கள், நெகிழி & குப்பையை நீக்குதல், கடற்கரை சுத்தம் செய்தல் போன்ற பணிகள் திறம்பட மேற்கொண்டது. மேலும், தூய்மைப் பணி குறித்து, கொக்கம்பாளையம், முதனை, மருங்கூர், விருத்தாசலம், வீரசிங்ககுப்பம், காராமணிக்குப்பம், வடலூர், இருப்பு, ஏ.அகரம், குறிஞ்சிப்பாடி, மேல்பூவணிக்குப்பம், தாத்தன்குப்பம், அரங்கமங்களம், கோளக்குப்பம், அயன் குறிஞ்சிப்பாடி, சகாயபுரம், மேல்பாப்பன்பட்டு, இலவரசன்பட்டு, வேங்கடாம்பேட்டை மற்றும் அன்னதானப்பேட்டை ஆகிய சுற்றுவட்டார கிராமப் பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணாக்கர்களிடையே, சிறு நகைச்சுவை நாடகம், பாட்டு மற்றும் வினாவிடைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதன் நிறைவு நாள் நிகழ்ச்சியில், நமது நிறுவன மனிதவளத் துறை இயக்குனர், திரு ஆர். விக்ரமன் அவர்கள் தன்னார்வலர்கள் பங்கேற்ற தூய்மை விழிப்புணர்வுப் பேரணியினை, நெய்வேலியில் தொடங்கி வைத்தார். இப்பேரணி கடலூரில் நிறைவு பெற்றது. கடலூர் சில்வர் கடற்கரையில் நடந்த நிகழ்வில், மாவட்ட ஆட்சியர், திரு வி.பி. தண்டபாணி அவர்கள், கடற்கரையைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துகூறும் வகையில் நடைபெற்ற ஓர் சிறு மாரத்தான் ஓட்டப்பந்தயத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும், நமது நிறுவனம், வடலூர் சந்தையில் தூய்மைப் பணியினை மேற்கொண்டது.

இருவாரத் தூய்மைப் பணியின்போது, நமது நிறுவனத்தின் அனைத்துப் பகுதிகளிலும், நெய்வெலி நகரப் பகுதிகளிலும் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும், தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வமயம், நமது நிறுவன ஊழியர்கள் 7500 மரக்கன்றுகளை நட்டனர்.



வடிவமைப்பு&வெளியிடுவோர்

என்.எல்.சி. இந்தியா லிமிடெட்

மக்கள் தொடர்புத் துறை

CREATING WEALTH FOR WELLBEING

என்.எல்.சி. இந்தியா லிமிடெட்

(முன்னாள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் லிமிடெட்)

நவரத்னா- இந்திய அரசு நிறுவனம்